# <u>இராசிபுரம் நகராட்சி</u>

## <u>நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

2022–ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27–ஆம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி<br>நாள் : .12.2022

தலைவர்,<br>நகர் மன்றம்.

## <u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23 திட்டத்தின் கீழ் நகர்மன்றத் தீர்மானம் எண். 148 நாள் 05.09.2022–இன்படி 4.916 கி.மீ. கொண்ட 25 மண் சாலைகளை தார் சாலைகளாக அமைக்கும் பணிகளுக்கான முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அரசாணை (4டி) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (SS & FC) நாள் 01.12.2022–இல் 4.695 கி.மீ. கொண்ட 24 மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றவும் மற்றும் 0.221 கி.மீ. மண் சாலையை கான்கிரீட் சாலையாக அமைக்கும் பணிகளுக்கு ரூ.467.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலைப் பணிகளுக்கு, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி பெற முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கும் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணையின்படி ரூ.467.70 இலட்சம் மதிப்பீட்டில், நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று சாலைப் பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி பெற முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கும் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2923/22/இ1)

**தீர்மானம் எண். 217**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23 திட்டத்தின் கீழ் வாரச்சந்தை (Weekly Market) அமைக்கும் பணிகள் மேற்க்கொள்ள அரசாணை (4டி) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (SS & FC) நாள் 01.12.2022–இல் KNMT பங்கு ரூ.112.00 இலட்சம் மற்றும் நகராட்சிப் பங்கு ரூ.48.00 இலட்சம் என்ற நிதி பங்கீட்டில் ரூ.160.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதி பங்கீட்டின்படி, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வாரச்சந்தை (Weekly Market) அமைக்கும் பணியின் தொழில்நுட்ப அனுமதி பெற முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணையின்படி ரூ.112.00 இலட்சம் மற்றும் நகராட்சிப் பங்கு ரூ.48.00 இலட்சம் என்ற நிதி பங்கீட்டின்படி, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வாரச்சந்தை (Weekly Market) அமைக்கும் பணியின் தொழில்நுட்ப அனுமதி பெற முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1730/22/இ1)

**தீர்மானம் எண். 218**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் புதியதாக பல அடுக்கு வாகன நிறுத்தத்துடன் கூடிய வணிக வளாகம் (Commercial Complex with multi level car parking) கட்ட ரூ. 1300.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்க்காணும் பணிக்கு, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு ரூ. 1300.00 இலட்சம் மதிப்பீட்டிலான பல அடுக்கு வாகன நிறுத்தத்துடன் கூடிய வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி கோர நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்டப் பணிக்கு நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4368/22/இ1)

**தீர்மானம் எண். 219**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட இராஜவாய்க்கால் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு ரூ. 250.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்க்காணும் பணிக்கு, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு ரூ. 250.00 இலட்சம் மதிப்பீட்டிலான இராஜவாய்க்கால் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி கோர நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்கண்ட பணிக்கு நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4370/22/இ1)

**தீர்மானம் எண். 220**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(5) இயக்குநர் மற்றும் செயலாளர், மாநில நல வாழ்வு சங்கம், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1869/NUHM/SHS/2015 நாள் 28.06.2022–இன்படி தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம் 2022–23–இன்கீழ் இராசிபுரம் நகராட்சியில் ரூ. 120.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட முதல் தவணையாக ரூ. 18.00 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியிலுள்ள பொது பயன்பாட்டு இடம் (S.F.No. 208/1A) தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, ரூ. 120.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நிர்வாக அனுமதி பெற நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**(2695/21/இ1)**

**தீர்மானம் எண். 221**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட V.O.C. நகர் 1000 அடி ஆழ்துளைக் கிணற்றின் 10 எச்.பி. நீர்முழ்கி மின்மோட்டார் பேனல்போர்டு பழுதடைந்ததை புதியதாக மாற்ற பெறப்பட்ட விலைப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறு.

1) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, 25எ, எம்.ஜி.ஆர். நகர், காட்டூர் – ரூ. 22500/–
2) திரு எ. சுப்ரமணி, 4டி, குமாரசாமி தெரு, இராசிபுரம் – ரூ. 23400/–
3) திரு ஆர். இராஜா, குமாரசாமி தெரு, இராசிபுரம் – ரூ. 23000/–

மேற்க்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி, 25எ, எம்.ஜி.ஆர். நகர், காட்டூர் அவர்கள் மூலம் பணிகள் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களுக்கு பணியாணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(2994/22/இ2)**

**தீர்மானம் எண். 222**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள வார்டு எண். 1 முதல் 13 வரை ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள நீர்முழ்கி மோட்டார் மற்றும் சிறு மின் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு சின்டெக்ஸ் டேங் மூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டு வருவதால் மேற்க்கண்ட வார்டுகளிலுள்ள மின் மோட்டார் பழுதுகளை சரிசெய்யும் பொருட்டு 2022 முதல் 2023–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 4.80 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்க்காணும் பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வழங்கலாம். (4446/22/இ2)

**தீர்மானம் எண். 223**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14 முதல் 27 வரையுள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள நீர்மூழ்கி மோட்டார் மற்றும் சிறு மின் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு சின்டெக்ஸ் டேங் மூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டு வருகிறது. மேற்க்கண்ட வார்டுகளிலுள்ள மின் மோட்டார் பழுதுகளை சரிசெய்து வழங்க 2022–2023–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 4.90 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4447/22/இ2)

**தீர்மானம் எண். 224**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறு மூலம் மின் மோட்டார் இறக்கி சின்டெக்ஸ் டேங் வைத்து தண்ணீர் வசதி செய்யப்பட்டு வருவதால் மேற்க்கண்ட பகுதிகளிலுள்ள குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய 2022–2023–ஆம் ஆண்டிற்காகும் உத்தேச செலவினம் ரூ. 4.80 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்க்காணும் பணிகள் மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (4445/22/இ2)

**தீர்மானம் எண். 225**

அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சியில் பொது சுகாதாரம் மலேரியா பிரிவில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசுப்புழுக்கள் மற்றும் முதிர் கொசுக்களை அழிப்பதற்கான மருந்துகள் Pyrethrum – 200 லிட்டர் மற்றும் Temephos – 200 லிட்டர் மருந்துகள் வாங்கிக்கொள்ள அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகரித்துள்ள நிறுவனத்தில் மருந்துகள் பெற்றதற்கும் அதற்கான செலவினம் ரூ. 4.20 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (3628/22/எச்1)

**தீர்மானம் எண். 226**

அனுமதிக்கப்பட்டது.

**(11)** இராசிபுரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் இட்லி மாவு அரைக்கும் இயந்திரம் பழுதான காரணத்தால் அவசர அவசியம் கருதி பழுதினை சரிசெய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | | |
|---|---|---|---|
| 1) ஸ்ரீ பொன் காளியம்மன் மெட்டல் மார்ட், இராசிபுரம் | – | ரூ. | 15430/– |
| 2) ஸ்ரீ ஆஞ்சநேயர் பர்னிச்சர்ஸ், இராசிபுரம் | – | ரூ. | 14920/– |
| 3) ஸ்ரீ ஆஞ்சநேயா வெட்கிரைண்டர் | – | ரூ. | 14780/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண். 3, ஸ்ரீ ஆஞ்சநேயா வெட்கிரைண்டர் அவர்களது விலைப்புள்ளியினை ரூ. 14780/–ஐ ஏற்கலாம். மன்ற அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ ஆஞ்சநேயா வெட்கிரைண்டர் அவர்களை அவசர அவசியம் கருதி பழுதினை சரிசெய்ய அனுமதிக்கலாம். அதற்கான செலவுத் தொகை ரூ. 14780/–ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3654/14/சி4)

**தீர்மானம் எண். 227**

அனுமதிக்கப்பட்டது.

**(12)** இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியை மேற்கொண்டு வரும் Relyon Facility Services Pvt. Ltd., Chennai நிறுவனத்திற்கு 30.11.2022–இல் ஒப்பந்த பணிக்காலம் முடிவடைவதால் மேலும், டிசம்பர் 2022 ஒரு மாத காலத்திற்கு பணி நீடிப்பு ஆணை நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (2293/19/எச்1)

**தீர்மானம் எண். 228**

அனுமதிக்கப்பட்டது.

**(13)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3 – சுவாமி சிவானந்தா சாலை, வார்டு எண்.4 – வடக்கு காலனி, மில் சந்து, வார்டு எண். 8 – வி. நகர் ரோடு எண். 4, வார்டு எண். 15 – தேரடி தெரு, வார்டு எண். 17 – வரதன் தெரு, வார்டு எண். 24 – டிவிஎஸ். தெரு, வார்டு எண். 26 – பி.எஸ்.தோட்டம், செட்டியண்ணன் தெரு ஆகிய பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறு மூலம் உப்புநீர் ஏற்படுத்துதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 3,00,000/–ற்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1) திரு என். செல்லப்பன், இராசிபுரம் – 0.21% மதிப்பீட்டைவிட குறைவு.
2) திருமதி ஆர். சாகிதா, இராசிபுரம் – 1.14% மதிப்பீட்டைவிட அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.21% குறைவான திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மேற்க்கண்டவாறு மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்க்கண்ட பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3631/22/இ2)

**தீர்மானம் எண். 229**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, வள்ளலார் கோவில் பின்புறம் கட்டனாச்சம்பட்டி கோனேரிப்பட்டி பிளாக் 1–இல் ஏற்கனவே உள்ள கைப்பம்பை அகற்றிவிட்டு நீர் முழ்கி சிறு மின் விசைப்பம்பு பொருத்தி சின்டெக்ஸ் டேங் வைத்து தண்ணீர் வசதி செய்துதர மதிப்பீடு ரூ. 1.50 இலட்சமாகும். மேற்படி ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்க்கண்ட செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (4577/22/இ2)

**தீர்மானம் எண். 230**

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) தினசரி மார்க்கெட் பொதுக்கழிப்பிடம் உள்ள கழிவுகள் கழிவு தொட்டியுடன் உள்ளது. தற்போது தினசரி சந்தையில் இரண்டு கடைகள் கட்டப்பட உள்ளதால் தினசரி சந்தை கழிப்பிடத்திற்கு பாதாள சாக்கடை வசதி செய்தால் கழிப்பிடம் மற்றும் மார்க்கெட் கழிவுநீர் செல்லவும் அதே சாலையிலுள்ள வீடுகளுக்கும் பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்த ஏதுவாக Manhole அமைத்து குழாய் பதிக்க வேண்டியுள்ளது. மேலும், அம்மா உணவகம், அரசு மருத்துவமனையிலுள்ள கழிவுநீரை பாதாள சாக்கடையில் இணைக்க மதிப்பீடு ரூ. 3.00 இலட்சமாகும். ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(4503/22/இ2)

**தீர்மானம் எண். 231**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி குடிநீர் பிரிவு குடிநீர் லாரி எண். TN 28 BZ 8975 வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதரப் பணிகள் மேற்க்கொள்ள TVS ஆட்டோ மொபைல்ஸ், சேலம் நிறுவனத்தில் பணிகள் மேற்க்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 69569.60–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுதுநீக்கம் செய்யப்பட்டதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளப்பட்டதற்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

குடிநீர் லாரி எண். TN 28 BZ 8975–இன் பழுதுகளை நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று சேலம், TVS ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தில் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கும், தொகை வழங்குவதற்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**(3957/22/இ2)**

**தீர்மானம் எண். 232**

அனுமதிக்கப்பட்டது.

**( 17 )** இந்நகராட்சிப் பகுதியிலுள்ள **13** வார்டுகளிலுள்ள தெருவிளக்கு பராமரிப்பு செய்ய **16.12.2022** முடிய அனுமதி முடிவடைவதால் தற்போது இந்நகராட்சியிலுள்ள அனைத்து தெருவிளக்குகள் LED விளக்குகளாக மாற்றம் செய்ய ஒப்பந்தப்புள்ளிக் கோரி நடவடிக்கையில் உள்ளதால் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகள் **13** வார்டுகளுக்கு பராமரிப்பு செய்து வந்த நிறுவனத்திற்கு இரண்டு மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

இந்நகராட்சிப் பகுதியிலுள்ள **13** வார்டுகளிலுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்ய **16.12.2022** முடிய அனுமதி முடிவடைவதால் மீண்டும் இரண்டு மாதங்களுக்கு அதே நிறுவனத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்க நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று பணியினை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(1207/19/இ2)**

**தீர்மானம் எண். 233**

அனுமதிக்கப்பட்டது.

**( 18 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் குடிநீர் பகிர்மான மெயின் மற்றும் பகிர்மான குழாயில் ஏற்படும் பழுதுகளை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சரிசெய்ய போதிய பணியாளர்கள் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் இல்லாததால் ஏற்கனவே **16** நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சிப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு மின்மோட்டார் இயக்க இரண்டு நபர்களும், குடிநீர் குழாய் பழுதுநீக்க ஒரு நபரும் மொத்தம் கூடுதலாக **3** நபர்கள் அதே விலை விகிதத்தில் குழு மூலம் பணியமர்த்த அதற்கான கூடுதல் செலவினம் 3x30x450 = ரூ. **40500/–**ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும், **01.11.2022** முதல் **3** பணியாளர்களை பணியமர்த்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

இந்நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மின்மோட்டார் இயக்க இரண்டு நபர்களும், குடிநீர் குழாய் பழுதுநீக்க ஒரு நபரும் மொத்தம் **3** நபர்கள் அதே விலை விகிதத்தில் குழு மூலம் **01.11.2022** முதல் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியமர்த்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(3817/21/இ2)**

**தீர்மானம் எண். 234**

அனுமதிக்கப்பட்டது.

**(19)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட **2022–23–**ஆம் ஆண்டிற்கு சொத்துவரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம் ஆகியவைகள் வசூல் செய்யும் பொருட்டு பொது மக்களிடம் பொது சுகாதார ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய **4** வண்டிகளுக்கு மைக்செட், ஆம்ப், ஸ்பீக்கர், பென்டிரைவர் ஆகியவைகள் புதியதாக வாங்கி பொருத்த உத்தேச தொகை ரூ. **70000/–**ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(1207/19/இ2)**

**தீர்மானம் எண். 235**

அனுமதிக்கப்பட்டது.

**(20)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி எண். TN 28 BZ 9021 வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதரப் பணிகள் மேற்க்கொண்டு தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதால் TVS ஆட்டோ மொபைல்ஸ், சேலம் நிறுவனத்தில் பணிகள் மேற்க்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. **86967/–**ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பழுதுநீக்கம் செய்யப்பட்டதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளப்பட்டதற்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

குடிநீர் லாரி எண். TN 28 BZ 9021–இன் பழுதுகளை நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று சேலம், TVS ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தில் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கும், தொகை வழங்குவதற்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**(3956/22/இ2)**

**தீர்மானம் எண். 236**

அனுமதிக்கப்பட்டது.

**(21)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **23**, குப்புதாசன் தெருவில் நகராட்சிக்குச் சொந்தமான திறந்தவெளிக் கிணற்றினை சுத்தம் செய்து நீர் முழ்கி மோட்டார் இறக்கி பொது மக்களுக்கு சின்டெக்ஸ் டேங் வைத்து தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ. **0.75** இலட்சமாகும். மேற்படி ரூ. **0.75** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(  /22/இ2)**

**தீர்மானம் எண். 237**

அனுமதிக்கப்பட்டது.

**(22)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555 - **375000** கி.மீட்டர் ஓட்டியுள்ளதால் பழுதுகளை நீக்கம் செய்துதர விலைப்புள்ளி வழங்கக் கோரி பணி மேலாளர், எஸ்கேஎஸ் ஆட்டோ மொபைல்ஸ், சேலம் என்ற நிறுவனத்தில் கோரப்பட்டது. மேற்படி

வாகனத்தை பழுது நீக்கம் செய்ய ரூ. 94913/–ற்கு விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கான தொகை ரூ. 94913/–ற்கு எஸ்கேஎஸ் ஆட்டோ மொபைல்ஸ் என்ற நிறுவனம் சேலம் அவர்களுக்கு பணியாணை வழங்கி தொடர் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(3898/22/இ2)

**தீர்மானம் எண். 238**

அனுமதிக்கப்பட்டது.

**(23)** இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 18–இல் இராமசாமி தெரு எண். 1 மற்றும் 2–இல் தார்சாலை அமைக்க TNSUDP 2020-21 திட்டத்தின்கீழ் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் சாலையின் அகலம் 3 மீட்டருக்கும் குறைவாக உள்ளதாலும் மின்கம்பம் மற்றும் மின் ஒயர் தார்சாலை அமைக்கும் இயந்திரத்தின்மீது மோதும் நிலையுள்ளதால் தார்சாலை அமைக்க இயலவில்லை. எனவே, மேற்காணும் சாலையை நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கான்கிரீட் சாலையாக அமைக்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கான்கிரீட் சாலையாக அமைக்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1335/20/இ1)

**தீர்மானம் எண். 239**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(24)** இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 25–இல் கோனேரிப்பட்டி எக்ஸ்டென்சன் நெ. 1–இல் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க TNSUDP 2020-21 திட்டத்தின்கீழ் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்க்குறிப்பிட்ட 25–ஆவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள், தற்போதுள்ள சாலை மட்டத்தைவிட 1 அடி ஆழத்திற்கு எடுத்துவிட்டு கழிவுநீர் வடிகால் இரு பக்கங்களிலும் அமைத்து சாலையமைக்க கோரியுள்ளனர். எனவே, கோனேரிப்பட்டி எக்ஸ்டென்சன் நெ. 1 பகுதியில் மேற்க்குறிப்பிட்டவாறு நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 1 அடி ஆழம் சாலையை எடுத்துவிட்டு இருபக்கமும் கழிவுநீர் வடிகால் வசதியுடன் சாலை அமைக்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று சாலை பணி செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1335/20/இ1)

**தீர்மானம் எண். 240**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(25) இராசிபுரம் நகராட்சிக்கு தினசரி குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நெடுஞ்குளம் காட்டூர் காவேரி ஆற்றிலிருந்து 56 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வருவதால் குடிநீரினை Spot Chlorination செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் வழங்க 2022–23–ஆம் ஆண்டிற்கு ஒரு மாதத்திற்கு ரூ. 50000/– தேவைப்படுகிறது. எனவே, மூன்று மாதத்திற்கு ரூ. 1.50 இலட்சமாகும். எனவே, பொது மக்களின் குடிநீர் நலன் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அ) நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3061/22/இ2)

**தீர்மானம் எண். 241**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.